**//தனிகவனம்//** **//அவசரம்//**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 3571/அ2/2021 நாள் 03.12.2021.

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் . பொது சேம நலநிதி கணக்கு எண் வைத்துள்ள சந்தாதாரர்களின் கணக்கில் 2015- 2016 ஆம் நிதி அண்டு முடிய கணக்கீட்டுத் தாளில் உள்ள விடுபட்ட தொகையினை ( Missing Credit ) சரி செய்யும் பொருட்டு உரிய விபரங்கள் மாநிலக் கணக்காயருக்கு அனுப்ப கோருதல் . தொடர்பாக.

பார்வை
1. அரசு நேர்முக கடிதத ந.க.எண் 12801/GL 11 /2021-1, நாள் 19.07.2021
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 001068/ எச் /இ3/2021 நாள் 18.11.2021

பார்வை 1 ல் காணும் கடிதத்தின் படி அரசின் நேர்முக கடிதத்துடன் பெறப்பட்ட மாநிலக் கணக்காயர் அலுவலக கடிதத்தில் பள்ளிக் கல்வித் துறையில் பணிபரியும் பணியாளர்களில் பொது சேம நல நிதி கணக்கு எண் வைத்துள்ள 11547 சந்தாதாரர்களின் கணக்கீட்டுத் தாளில் ( GPF Account Number ) 2015 - 2016 ஆம் நிதியாண்டு முடிய 50549 சந்தா தொகைகள் விடுப்பட்டுள்ளதாகவும் (Missing Credit) என்றும் விடுபட்ட தொகையினை சரி செய்யும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள பார்வை 2ல் காணும் பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் ( DDO ) பொது வைப்பு நிதி விடுபட்ட தொகையினை, அதற்குரிய படிவத்தில் பூர்த்தி செய்து நேரடியாக மாநிலக் கணக்காயர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து அதன் விவரத்தினை உடனடியாக பள்ளிக் கல்வி ஆணையரகத்திற்கும் , அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் விவரங்கள் அரசு மற்றும் மாநிலக் கணக்காயர் அலுவலகத்தால் கோரியுள்ளதால் இதன் மீது தனிகவனம் செலுத்தி உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அதன் விவரத்தினை பள்ளிக் கல்வி ஆணையரகத்திற்கும் இவ்வலுவலகத்திற்கும் அனுப்பி வைக்குமாறும் அனைத்து வகை அரசு / உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு –**

பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறை கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

**பெறுநர்**

1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது
2. அனைத்து அரசு / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள்.

**நகல்**

தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் சென்னை-6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது,